## செப்டம்பர் - 13 - புதன்
### புனித ஜோன் கிறிசோஸ்ரம்

**புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கினவரின் சாயலுக்கேற்பப் புதுப்பிக்கப்படுகிறது. இவ்வாறு நீங்கள் கடவுளை முழுமையாய் அறிய முடியும். கொலோ. 3:10**

### முதல் வாசகம் : கொலோசேயர் 3 : 1 – 11

சகோதர சகோதரிகளே! நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவாகளானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்கு கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சாரந்தவை பற்றியல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும்பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள். ஆகவே உலகப்போக்கிலான உங்கள் இயல்புக்குரிய பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீயநாட்டம், சிலைவழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிடுங்கள். இவையே கீழ்ப்படியா மக்கள்மீது கடவளின் சினத்தை வரவழைக்கின்றன. இத்தகையவர்களோடு நீங்கள் வாழ்ந்தபோது நீங்களும் இவற்றில்தான் உழன்றீர்கள். ஆனால் இப்பொழுது நீங்கள் சினம், சீற்றம், தீமை ஆகிய அனைத்தையும் அகற்றிவிடுங்கள். பழிப்புரை, வெட்கக்கேடான பேச்சு ஆகிய எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. ஒருவரோடு ஒருவர் பொய்பேசாதீர்கள். ஏனெனில் நீங்கள் பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கினவரின் சாயலுக்கேற்பப் புதுப்பிக்கப்படுகிறது. இவ்வாறு நீங்கள் கடவுளை முழுமையாய் அறிய முடியும். புதுப்பிக்கப்பட்ட நிலையில் கிரேக்கர் என்றும், யூதர் என்றும், விருத்தசேதனம் பெற்றவர் என்றும், விருத்தசேதனம் பெறாதவர் என்றும், நாகரிகம் அற்றோர் என்றும், சீத்தியர் என்றும், அடிமை என்றும், உரிமைக்குடிமக்கள் என்றும் வேறுபாடில்லை. கிறிஸ்துவே அனைவருள்ளும் அனைத்துமாயிருப்பார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எல்லோருக்கும் நன்மை செய்பவர்

### நற்செய்தி : லூக்கா 6 : 20 – 26

அக்காலத்தில் இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை: ”ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே. இப்பொழுது பட்டினியாய் இருப்போரே, நீங்கள் பேறு பெற்றோர் ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுதுகொண்டிருப்போரே, நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள். மானிடமகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து, ஒதுக்கி வைத்து, நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும்போது நீங்கள் பேறுபெற்றோர். அந்நாளில் துள்ளி மகிழ்ந்து கொண்டாடுங்கள் ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். அவர்களுடைய மூதாதையரும் இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்துவந்தனர். ஆனால் செல்வர்களே ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டீர்கள். இப்போது உண்டு கொழுந்திருப்போரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் பட்டினி கிடப்பீர்கள். இப்போது சிரித்து இன்புறுவோரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் துயருற்று அழுவீர்கள். மக்கள் எல்லாரும் உங்களைப் புகழ்ந்து பேசும்போது ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் அவர்களின் மூதாதையரும் போலி இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்தார்கள்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைகள் மனிதன் தன்னை உண்டாக்கிய கடவுளின் இயல்பை அணிந்துகொள்ளவும், அவரது சாயலாகத் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளவும் தேவையான வாழ்க்கை முறையைத் தெட்டத்தெளிவாக நமக்கு எடுத்தியம்பி நிற்கின்றன. இந்த வகையில் முதலாம் வாசகம் நாம் நமது சொந்த இயல்புகளை ஆராய்ந்து நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ளப் பயனுள்ள பல விடயங்களைக் கற்பிக்கின்றன. இறையாட்சியின் கூறுகளை நாம் முன்சுவைத்துப் பார்ப்பதற்கு நாம் பிறர் மட்டில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை இறைமகன் இயேசு இன்றைய நற்செய்தியாக நமக்குத் தருகின்றார். இவ்வார்த்தைகளை மேலோட்டமாக நாம் பார்க்கும்போது நாம் பட்டினி கிடப்பதையும், மகிழ்ச்சியின்றி கவலையாயிருப்பதையும் துன்பப்படுவதையும் கடவுள் ஏன் விரும்புகின்றார்? என்ற கேள்வி நம் மனத்தில் எழக்கூடும். மாறாக, நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டுமென்றே கடவுள் விரும்புகின்றார். அதாவது முழு மனுக்குலமும் மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் வாழவேண்டும் என்பதே அவர் விருப்பம். அதுவே இறையாட்சி. பிறர் பசித்திருக்க நாம் புசித்து மகிழ்வதும், பிறர் கவலையிலே நாம் மகிழ்ச்சி காண்பதும் கடவுளுக்கு உகந்த காரியங்கள் அல்ல என்பதையும், கடவுளுடைய வார்த்தையை அறிந்து கொள்ளும் பசி, அந்த வார்த்தைகளை மற்றவர்களுக்கும் அறிவிக்க வேண்டும் என்ற தாகம் கொண்டவர்கள் பேறுபெற்றவர்கள் என்பதே இன்றைய நற்செய்தியின் சாராம்சமாகும்.